# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
## TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)
Gangaiamman Koil Street, Karapakkam, Chennai - 600 097.
Phone No.044-28389040, 044-28389043, E-mail: registrar@tnteu.ac.in Website: www.tnteu.ac.in


**No.TNTEU/R/2021/651** **Date: 20.04.2021**

**Prof.V.Balakrishnan, Ph D**
Registrar i/c

## சுற்றறிக்கை

பொருள்: தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் - இணைவுபெற்ற கல்வியியல் கல்லூரிகள் - கொரோனா தொற்றுநோய் அதிகரித்தல் - சமூக விழிப்புணர்வு - பணிபுரியும் ஆசிரியர்கள் வாயிலாக மாணவர்களுக்கும், சமுதாயத்திற்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த செயல்பாட்டு குழு அமைத்து செயல்படுத்துதல் - செயல்பாடுகளை முன்னெடுத்தல் தொடர்பாக.

பார்வை: மேதகு தமிழக ஆளுநர் தலைமையில் நடைபெற்ற துணைவேந்தர்கள் இணையவழி கூட்டத்தில வழங்கப்பட்ட அறிவுரைகள் - நாள் 20.04.2021.

-----

மேற்காண் பார்வையில் குறிப்பிட்டுள்ளவாறு, தமிழ்நாட்டில் தற்போது கொரோனா நோய்தொற்று மிக அதிக அளவில் வேகமாக பரவி வருகிறது என்பது அனைவரும் அறிந்ததே. இதுபோன்ற இக்கட்டான சூழ்நிலையில் நோய்தொற்று மேலும் பரவாமல் இருப்பதற்கு பல்கலைக்கழகத்தின் இணைவுபெற்றுள்ள கல்வியியல் கல்லூரிகளின் சார்பில் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவது என்பது கல்லூரிகளில் பணிபுரியும் அனைத்து ஆசிரியர்கள் மற்றும் மாணாக்கர்கள் ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும்.

எனவே, கொரோனா நோய்தொற்று இச்சமூகத்தில் மேலும் பராவாமல் இருப்பதற்கு உரிய விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கு இணைவுபெற்ற கல்வியியல் கல்லூரியின் முதல்வர் தலைமையில் பணிபுரியும் ஆசியர்களை உள்ளடக்கிய செயல்பாட்டு குழு (Activity Planning Committee) அமைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட கல்லூரியினால் மேற்கொள்ளப்பட்ட விழிப்புனர்வு செயல்பாட்டு அறிக்கையினை (Activity Report) உரிய ஆதாரத்துடன் கல்லூரி முதல்வர்கள் 15 நாட்களுக்கு ஒருமுறை பல்கலைக்கழகத்திற்கு coronareporttnteu@gmail.com என்ற மின்னஞ்சல் வாயிலாக தவறாது சமர்ப்பிக்குமாறும் மேலும், அதன் விவரங்களை தங்கள் கல்லூரியின் இணையதளத்தில் வெளியிட்டு இச்சமூகத்தின் பெரும்பாலான பொதுமக்களை சென்றடைவதற்கு வழிவகை செய்திட வேண்டுமாறு கண்டிப்பாக அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இச்சுற்றறிக்கையில் இணைத்துள்ள பல்வேறு சமூக விழிப்புணர்வு செயல்பாடுகளை தவறாமல் பின்பற்றி தங்களை பாதுகாத்துக்கொள்ளவும் மேலும், சமூக விழிப்புணர்வினை ஏற்படுத்தி கொரோனா நோய் தொடர்ந்து பரவாமல் தடுப்பதற்கு தங்களின் சமூக பங்களிப்பினை தவறாமல் வழங்கிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பதிவாளர் (பொ) 20/4/21

பெறுநர்

முதல்வர்கள்
அனைத்து இணைவு பெற்ற கல்வியியல் கல்லூரிகள்
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்

## சமூக விழிப்புணர்வு செயல்பாடுகள்

கொரோனா நோய்தொற்று பரவாமல் இருப்பதற்கு சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரும் கடைபிடிக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

- **முகக்கவசம் தவறாமல் அணிதல்** (Wearing Mask)
- **சமூக இடைவெளியை பின்பற்றுதல்** (6 மீட்டர் இடைவெளி) (Keep Social Distance)
- **அடிக்கடி கைகழுவுதல்** (Frequent Hand Wash)
- **கிருமிநாசினியை பயன்படுத்துதல்** (Sanitization)
- **தடுப்பூசி போட்டுக்கொள்ளுதல்** (Vaccination)
- **சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துதல்** (Creating Awareness)
- **அரசின் கட்டுப்பாடுகள் குறித்த வழிமுறைகளை தவறாது பின்பற்றுதல்** (Strictly follow the Government Guidelines)

மற்றும் இயற்கை மருத்துவ முறைகளை பின்பற்றி கபசுர குடிநீர் மற்றும் மூலிகை குடிநீர் பருகுதல்.

*****

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் இணைவுபெற்ற கல்வியியல் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மேற்குறிப்பிட்டுள்ள முன்னெச்சரிக்கை செயல்பாடுகளை முன்னிலைப்படுத்தி பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரியின் பெயரில் குறும்படம் (மூன்று நிமிடத்திற்கு மிகாமல் - Not more than three minutes video), விழிப்புணர்வு படங்கள் (Awareness Posters), விழிப்புணர்வு குறித்த இணையவழி போட்டிகள், கவிதைகள் (Awareness competitions through online) போன்றவற்றினை ஒவ்வொரு ஆசிரியரும் தயார் செய்து அதனை தங்களது முதல்வரிடம் சமர்ப்பித்து ஒப்புதல் பெற்று மாணவர்களுக்கான இணையவழி வகுப்பில் தினமும் தவறாது ஒளிபரப்பு செய்து மாணவர்களுக்கும் அவர்களைச் சார்ந்த சமூகத்திற்கு மாணாக்கர்களின் வாயிலாக விழிப்புணர்வை ஏற்படுத்தவதோடு மட்டுமில்லாமல் அவற்றினை பல்வேறு சமூக வலைதளங்கள் (WhatsApp, Facebook, twitter YouTube and other medias) வாயிலாகவும், கல்லூரி மற்றும் பல்கலைக்கழகத்தின் இணையதளம் வாயிலாகவும் விளம்பரபடுத்தி இச்சமூகத்தின் பெரும்பாலான பொதுமக்களை சென்றடைவதற்கு வழிவகை செய்தல் வேண்டும்.

மேலும், கல்லூரிகளில் செயல்படும் நாட்டு நலப்பணித் திட்டம் (NSS) மற்றும் செந்சுருள் இயக்க அமைப்பு (RRC) ஆகியவைகள் தங்கள் அமைப்பின் வழிமுறைகளை பின்பற்றி இணையவழி விழிப்புணர்வு செயல்பாடுகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்டுள்ள செயல்பாடுகளின் வாயிலாக கொரோனா நோய் விழிப்புணர்வு செயல்பாட்டில் சிறந்த முறையில் தங்களது பங்களிப்பினை வழங்கும் ஆசிரியர்கள் மற்றும் கல்லூரிகளுக்கு பல்கலைக்கழகத்தின் சார்பில் பாராட்டு சான்றிதழ் (E-Certificate) வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பதிவாளர் (பொ)